**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.0845/ஆ3/2025, நாள். .04.2025.**

---

**பொருள் :** பள்ளிக்கல்வி – லூக்காஸ் TVS Ltd., – NCVET டிப்ளமோ திட்டம் செயல்படுத்த பயிற்சியாளர்களை தெரிவு செய்வது – தொடர்பாக.

**பார்வை :**
1. லூக்காஸ் TVS Ltd. நிறுவன பொது மேலாளரின் கடிதம், நாள்.12.02.2025.
2. சென்னை –06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.00012/ பகஇ/பிசி/2025, நாள்.14.02.2025.

-----

பார்வை –2ல் காணும் செயல்முறைகளின்படி, லூக்காஸ் TVS Ltd., NCVET டிப்ளமோ திட்டம் செயல்படுத்த பயிற்சியாளர்களை தெரிவு செய்ய உள்ளதாகவும் மேற்படி திட்டத்தில் கீழ்கண்ட நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு வாரத்திற்கு 6 நாட்களில் 5 நாட்கள் வேலை பயிற்சி மற்றும் 1 நாள் கோட்பாடு வகுப்பும் நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. 2 ஆண்டுகள் இப்பயிற்சி நடைபெற உள்ளதகா தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. 18 முதல் 23 வயதுக்குட்பட்ட 12 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு (ஆண்/ பெண்) இப்பயிற்சி வழங்கப்படுவதாகவும், விண்ணப்பதாரர்கள் கணிதம், அறிவியல், ஆங்கிலம் மற்றும் திறன் ஆகியவற்றில் நுழைவுத் தேர்வில் 45 சதவீதம் மதிப்பெண்கள் பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. பயிற்சியின்போது உதவித் தொகையான ரூ.15,251/– மற்றும் வருகை போனஸாக ரூ.500/– வழங்கப்படும் என்றும் மானிய விலையில் கேன்டீன் வசதிகள், சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. தகுதியின் அடிப்படையில் சுமார் 200 நபர்களுக்கு முதற்கட்டமாக பயிற்சி வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தகவல்களை மாணவர்களுக்கு தெரிவித்து விருப்பமுள்ள நபர்களை இப்பயிற்சியில் சேர்ந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு/ நகரவை / ஆதிதிராவிட நல / நிதியுதவி/ உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**// ஒப்பம்//**
**முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),**
**வேலூர்.**

**பெறுநர் :**
அனைத்து அரசு/ நகரவை / ஆதிதிராவிட நல / நிதியுதவி/
உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

**நகல் :**
கோப்பிற்கு.